செப்டம்பர் 22

## *புனித வில்லநோவா தோமாஸ் (1488 – 1555)*

இவர் வில்லநோவா நகரில் கல்வி பயின்றார். இவருடைய பெற்றோர் கடவுள் பக்தியுள்ளவர்கள். ஏழைகள் மீது இரக்கம் உள்ளவர்கள். இவரும் ஏழைகளை நேசித்து அவர்களுக்கு தாராளமாய் உதவி செய்தார். இவர் கல்வி பயின்ற பின் கல்வி கற்பித்து, பின் ஒரு துறவற சபையில் சேர்ந்தார். அதே ஆண்டில் லுத்தர் அந்த சபையை விட்டு விலக இருந்தார். தோமாஸ் குருப்பட்டம் பெற்ற பின் எல்லையற்ற ஆர்வத்தோடு உழைத்தமையால் 'ஸ்பெயின் நாட்டில் அப்போஸ்தலர்' என்று இவரை அழைக்கத் தொடங்கினார்கள் சபையின் சட்டங்களுக்குப் பிரமாணிக்கமாய் கீழ்ப்படிந்தார். இவரைக் கட்டாயப்படுத்தி பேராயராக்கினார்கள். இந்தப் பதவியிலும் இவர் ஏழையாக வாழ்ந்தார். "தர்மம் கொடுக்கிறவர்", "ஏழைகளின் தந்தை" என்ற பட்டப் பெயர்கள் இவருக்கு கிடைத்தன. வருமானங்கள் அனைத்தையும் தர்மத்துக்காவும், மருத்துவமனைகளுக்குப் போய் நோயாளிகளையும், அகதிகளையும் பராமரிப்பதற்கும் செலவழிப்பார். "கடவுள் உன் மன்றாட்டுகளுக்குச் செவி கொடுக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாயா? அப்படியானால் ஏழைகளின் குரலுக்கு செவி கொடுப்பாயாக. நீ கேட்கும் முன்னரே பூர்த்தி செய். முக்கியமாக தர்மம் கேட்க வெட்கப்படுபவர்களின் தேவைகளை பூர்த்தி செய். ஆயரது வருமானத்தில் மூன்றில் இரண்டு பகுதி தர்மத்தில் செலவிடப்பட்டது. நாள்தோறும் 500 ஏழைகள் உணவு பெற்று வந்தார்கள். நல்ல நிலையிலிருந்து பின் ஏழைகளாகி உதவிகள் கேட்க வெட்கப்படுகிறவர்களைத் தேடிக் கண்டுபிடித்து உதவி செய்ய சிலர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். தொழில் செய்து பிழைக்கும்படி ஏழைகளுக்குக் கருவிகள் வழங்கப்பட்டன. இவர் புதுமைகளினால் பல நோயாளிகளைக் குணப்படுத்தினர். கன்னெஞ்சரான பாவிகளை மனந்திருப்பினார். இவர் சாகும் பொழுது படுத்திருந்த கட்டில் இவருடையதல்ல. அவ்வளவுக்கு ஏழையாக இருந்தார். "ஆண்டவரே, உமது கரங்களில் என் ஆன்மாவை ஒப்படைக்கிறேன்" என்று சொல்லி 1555-ஆம் ஆண்டில் இறந்தார்.

**சிந்தனை:**

நீ கேட்கும் முன்னரே உன் தேவைகளைக் கடவுள் பூர்த்தி செய்ய வேண்டுமென்று விரும்புகிறாயா? அப்படியானால் ஏழைகளின் தேவைகளை அவர்கள் கேட்குமுன் செய். (புனித வில்லநோவா தோமாஸ்)

**செபம்:**

ஆண்டவரே, ஏழைகளிடமாய் உம்மை நாங்கள் காணும் வரம் தாரும்.